சிவயநம

# தமிழ் வழக்கு / சைவநெறி

## கொள்கை விளக்கம்

ஒப்பீட்டு ஆய்வாளருக்கு வசதியாக
200 குறிப்புக்கள் உள்ளன.

சைவநெறி ஆசிரியர், எழுத்தாளர்
பேச்சாளருக்கான கைந்நூல்




ஆசிரியர் : **கணபதி மகேசன்**
இளைப்பாறிய பிரதிக்கல்விப்
பணிப்பாளர் -
ஆணையாளர்.



**சைவநெறித் தொண்டர் கழகம்**
இல. 6, இராணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
இலங்கை.

**1997**

நமசிவய

# தமிழ் வழக்கு / சைவநெறி

## 1. பொதுவியல்

1. தமிழ், தமிழன், சைவம் - மூன்றும் உடன் பிறப்புக்கள் - இணை பிரியாதவை.

2. மதம் மொழிக்கும்; மொழி பண்பாடு, இனம் என்பவற்றுக்கும் ஆதாரம்.

3. சைவம். அநாதி; தான்தோன்றி. மனித நாகரிகத்துடன் ஆரம்பித்து வளர்வது, உயரம், அகலம் ஆழம் கடந்து நிற்பது.

4. 25,000 ஆண்டு பழமையானது. உலகளாவி இருந்தமைக்கான வரலாறு உண்டு. நதிக்கரை நாகரிகம் எல்லாமே சைவம் சார்ந்தவை.

5. அது உள்ளது சிறத்தல் என்னும் கூர்ப்பு வகையிலான அனுபவச் சமயம், பல பிறவிகடோறும் பெற்ற அனுபவ முதிர்ச்சி எனவுமாம்.

6. எக்காலத்திலாவது அது தீச்சத்திகளால் திணிக்கப்பெறாதது; இயல்பானது; திடீர்ச்சமயம அன்று.

7. மனிதராலோ, யாரோ ஒரு மனிதரின் நாமத்தாலோ ஆக்கப்பெற்றதன்று. சைவம். தீர்க்கதரிசிகள் தூதுவர் என யாரையும் பாராட்டுவதில்லை.

8, புறச்சமயங்களுக்கு மாறாக, அது வரலாற்றுச் சமயம் அன்று. அதன் கொள்கைக்கும், பெருமைக்கும் வரலாறு முக்கியமானதாகக் கருதப்படுவதில்லை.

9. நின்றனவும், சலிப்பனவும் சைவமேயாம் (சேக்கிழார்) எல்லா உயிர்களும், அம்மை, இம்மை, மறுமையிலும் சைவமேயாம். ஆதலால் சிறுவர்களைச் சமயி ஆக்குவதற்கான (Initiation) சடங்குகள், மதமாற்றம், சேர்த்தல் ஒன்றுகூடல், மேய்த்தல், கண்டித்தல். வெளியேற்றுதல், முத்திப்பேறு, பாவமன்னிப்பு வழங்குதல் ஆகிய அரசியல் அநாச்சாரங்கள் தமிழ் வழக்கில் இடம்பெறுவதில்லை.

10. சைவம் இயற்கையோடியைந்த இன்ப வாழ்வு தழுவியது. வழிபாடு ஓர் இயல்பூக்கம். அது உலகை ஒதுக்குவதில்லை.

11. சிவனே இன்ப, அன்பு, இயற்கை வடிவினன் - பகுத்தறிவினன்.

12. சைவம் அன்புநெறி. அது சங்ககால அகத்திணை மரபின் தொடர்ச்சி. வாழ்க்கையின் சகல உறுப்புக்களும் சிந்தனை, செயல் அனைத்தும் அன்புவழி இயங்கும். அன்பின் வழியது உயர்நிலை (திகு).

13. முப்பொருள், மும்மலம், முப்பத்தாறு தத்துவம்:- இவை தனித்துவம் நிறைவு பெற்ற, காலம் இடம் கடந்த சைவ சமய உறுதிப்பொருள்கள். மனத்தாலும் நினைப்பரிய அண்ட சராசரங்கள், அதன் இயக்கத்தோடு கூடிய காரணகாரியங்கள் அனைத்தினதும் சூக்குமம்; கரு; அணு; குளிகை. அவற்றை அனுமானம், அனுபவம், ஆகமம், தருக்கம், காட்சி, அக - புறச் சான்று ஆகிய அளவைகள் தாங்கி நிற்கின்றன. ஆதலால் சைவம் உலகம் முழுமைக்கும் பொருந்துமாறமைந்த ஒப்புவமையில்லா உண்மைச் சமயமாய் விளங்குகிறது.

14. சைவசித்தாந்தம், விஞ்ஞானம் கடந்த மெய்ஞ்ஞானம். அறிவியலுக்கு ஆற்றாத கருத்துக்கள் அதில் இடம்பெறவில்லை. அவை அனுபூதிமான்களான நாயன்மார்களைப் பின்பற்றி எழுந்தமையின் உறுதியான கொள்கையும் செயற்பாடும் கொண்டவை,

15. சைவத்தில், தத்துவமே சமயம்; சமயமே தத்துவம். இரண்டும் ஒன்றுக்கொன்று துணை. சைவநெறி - சைவ சித்தாந்தம் இணையானவை, இரண்டல்ல; ஒன்றே.

16. தோத்திரம் முதல் நூலாகவும் சாத்திரம் வழி நூலாகவும் தனித் தனி உள்ளன. அத்துடன் தோத்திரங்களிலே சாத்திரமும், சாத்திரங்களிலே தோத்திரமும் காணக்கிடக்கின்றன.

17. சைவம் அன்புநெறியாதலால், அது ஆகமம், ஆசாரம், சடங்கு. கிரியை கோத்திரம் முதலிய மனிதவியல் கட்டுப்பாடுகளுக்கு முக்கியம் கொடுக்கவில்லை. மறித்துள்ளே நோக்குமின் (திம)

18. கொல்லாமை, பிற உயிர்களிடம் அன்பு பாராட்டுதல், புலால் மறுத்தல், பஞ்சமா பாதகங்களை விலக்குதல் சைவப் பண்பு.

19. மனிதநேயம், சமூக சேவை, கதியற்றவருக்கு உதவுதல், விருந்து ஈதல் கடமைகள் சைவத்தின் உடன் பிறப்பு,

20. தாய்க்குலத்தை இறைவன் - இறைவி மட்டத்துக்கு உயர்த்திப் பெருமையளிப்பது சைவம். காதல், இல்லறம் இயல்பானது: இறைவனின் கொடை; இழிவன்று பெண்களை வீட்டுக்குள் அல்லது முழு ஆடைக்குள் அடக்கி ஒடுக்கி வைப்பதும், பொது இடங்களில் ஒதுக்குவதும் தமிழ் வழக்கில் இடம்பெறவில்லை.

21. சைவத்தில் தனிமனிதனின் சிந்தனைச் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் பேணப்படுகிறது. சிவனடியார் தமக்குள் உயர்வு தாழ்வு காண்பது தமிழ் வழக்கில் இல்லை.

22. சமயங்கள் சாற்றும் உண்மைகள் அனைத்தும் சைவத்தில் உள; ஆனால் சைவம் சாற்றும் உண்மைகள், தத்துவங்களில் ஒருசிலவே மறு சமயங்களில் உள.

## 2. சைவ சமயச் சாதனம் அல்லது வாழ்க்கையில் சைவநெறி

1. சிவன் தத்துவாதீதன்; பெரியான்; எங்கும் நிறைந்தவன். ஆயினும் அடியார்க்கு அருள்பாலிக்கும் பொருட்டு, அணுவாகி, உருக்கொண்டு ஆலயங்களில் எழுந்தருளியுள்ளான. இதனை எல்லாச் சைவசமய மக்களும் நம்புகிறார்கள். இக்கொள்கை காட்சி அளவையால் நிரூபிக்கப்பெற்றதுங்கூட.

2. திருக்கோயில் நாகரிகமே தமிழர் நாகரிகம். அது சமுதாய மையமாகவும். கலை, பண்பாடு, ஒப்புரவு, ஒழுக்கம், தவம், தானம், அன்பு, அறம் ஆகிய மனித விழுமியங்களின் ஊற்றாகவும் விளங்குவது.

3. தமிழரின் சுத்தம், சுகாதாரம், உடை. நடை என்பன தனித்துவம் வாய்ந்தவை. இதற்கு மூலகாரணம் திருக்கோயில் வழிபாடு, விழாக்கள், விரதங்களுமேயாம்.

4. உருவ வழிபாட்டின் தாயகம் சைவம். அது மிகப்பழமை வாய்ந்தது. மற்றெல்லாச் சமயங்களுக்கும் முன்னோடியாக விளங்குவது இத் தமிழ் வழக்கேயாம்.

5. கோபுரம், தூபி, சிற்பம், ஓவியம் முதலிய கலையம்சங்கள் பொலிந்து விளங்கும் திருக்கோயில், அதன் கருவறையிலே சிவக்

குறி நாட்டுதல், சிவனை அக்குறியில் எழுந்தருளச் செய்தல், நீராட்டுதல், நீறணிதல், மலர் மாலை ஆடை ஆபரணங்களால் அலங்கரித்தல், தீஞ்சுவைப் பண்டங்கள், பழங்களைப் படைத்தல், திருவிளக்கேற்றுதல், தூப, தீபம் காட்டுதல், மணி அடித்தல், இறைவன் - இறைவியை மேள தாளத்துடன், மணவாளக்கோலத்தில் திருவுலாச் செய்தல் இனையன பலவும் தமிழரின் தனிச் சிறப்பு வாய்ந்த வழிபாட்டு முறையாகும்.

6. திருமுறை ஓதுதல், இசை நடனம் கூத்து நவிற்றல், சிவசின்னம் அணிதல், சிவதிரவியம் வழங்குதல் என்பனவும் தமிழ் வழக்கேயாம்.

7. திருமுறைகளிலே சிறந்து விளங்கும் பண்ணிசை, பத்திரசம், சொற்செறிவு, பொருளடக்கம், தத்துவம் என்பன மறு சமயங்களிலே பத்திப் பாடல்கள் தோன்றுவதற்கு முன்னோடியாய் அமைவன.

8. திருமுறைகளின் சிறப்பினால், தமிழ் ஞானத்தமிழாய், இறையியலாய் இன்பியலாய், பத்தி இயக்கத்தின் தாயகம் ஆயிற்று.

9. திருமுறைகளும், சைவ சித்தாந்த சாத்திரங்களும் முறையே சைவத்தின் முதல், துணை நூல்களாகும். பிற அறநூல்கள் அனைத்தும் அவற்றின் வழி நூல்களேயாம் - மேலதிக வாசிப்பு நூல்கள்.

10. ஞான நூல்களைப் படித்தல், ஓதுதல், கேட்டல், உணர்தல் பிறர்க்கு உணர்த்துதல், சிவபூசை வழிபாடு செய்தல் ஒவ்வொரு தமிழனினதும் நாள் கடமையாகும்.

11. சிவபுண்ணியம், பசுபுண்ணியம் இருகண்கள் போல்வன. பசுபுண்ணியம் இயற்றாதார்க்குச் சிவபுண்ணியம் கைகூடாது.

12. சிவனை நினைவூட்டுவன. சிவத்தோடு தொடர்புடையன யாவும் சிவ சின்னங்களே. அவற்றுள் சிறந்தவை திருநீறு, உருத்திராக்கம் திருவைந்தெழுத்து.

13. சீவன் முத்தரின் ஆன்மீக ஈடேற்றத்துக்கு குரு ( திருவருள் ) லிங்க, சங்கம வழிபாடு வேண்டற்பாலது.
ஆரிய வழக்கில் குரு கோயில் பூசகரைக் குறிக்கும். அது தமிழ் வழக்கன்று.

14. தத்துவ ஞானியர், தொண்டர், சிவனடியார், நாயன்மார் முதலியோர் பெருமைக்கும் மதிப்புக்கும் உரியர். வணக்கத்துக்கும் வழிபாட்டிற்கும் உரியவர் அல்லர், அன்னாரின் பெயரால் ஆலயம் அமைத்துப் பூசை வழிபாடு செய்தல் தமிழ் வழக்கில் இல்லை.

15. சிறு தெய்வ வழிபாடு, நவக்கிரக வழிபாடு சைவநெறிக்குப் புறம்பானது. அது கீழ் மக்களின் பிறழ்வான நடத்தையைக் குறிக்கா நிற்கும்.

16. சைவ ஆதீனங்கள் ஆன்மீகத் துறையில் மக்களுக்கு வழிகாட்டுவன.

17. அவை மேனாட்டு ( மிசநரி இயக்கம் ) நிறுவனங்களைப் போல் அரசியல் ஆக்கிரமிப்பு, மதமாற்றம் முதலிய சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவதில்லை.

18. சைவத்தில் இறை உயிர் தொடர்பு மிக நெருக்கமாக உள்ளமையால் அது தொன்று தொட்டுத் தனியனின் சமயமாக உள்ளது. அகச் சமயமாயும் அன்பு நெறியாயும் விளங்குவதால் புறச்சமயத்தவர் போற்றும் கூட்டுவழிபாடு - ( Mass ) ஆராதனைக்குச் சைவம் முக்கியம் அளிப்பதில்லை அது அரசியல் சமயங்களுக்கு மட்டும் உரியது.

## 3. உயிர் / ஆன்மா

1. பதி, பசு, பாசம் ;- நடுவண் உள்ளது பசு. மற்றிரு உறுதிப் பொருள்களின் இயக்கமும் பசுவாகிய உயிரின் பொருட்டேயாம்.

2. உடலை இயக்குவது உயிர். ஆணவத்தின் வயப்பட்டமையின் அது பசு ஆகும்.

3. உயிரானது ஒலி அலைகளைப் போல எங்கும் பரந்துள்ளது பருமன் இல்லது. காட்சிப் பொருளும் அன்று.

4. அநாதி: என்றுமுள்ளது. தோற்றம் முடிவு இல்லை.
உயிர்கள் எங்கே? எப்படித் தோன்றின என்னும் தத்துவ ஆய்வுக்கு இதுவே மிகப் பொருத்தமான விடை.

5. சித்துப்பொருள் : சடப்பொருள் அல்லது கந்தகங்களின் கூட்டு. என்பதற்கில்லை.

6. சிற்றறிவுடையது. தானாக ஒன்றையும் அறியாது, அறிவிக்க அறியும். அறிவிப்பவன் சிவன் அதனால் சிதசித்து என்னும் பெயர் பெற்றது.

7. உயிரின் எண்ணிக்கை : பல; முடிவிலி,

8. உயிர் ஒவ்வொன்றும் தனித்துவம் பெற்றது. உடல் தொடர்பான குணம் குறிகள் வேறுபடுவதே போன்று, உயிர்களும் தம்முள் வேற்றுமைப்படுவன. அவை தம்மைச் சார்ந்த பாசத்தின் உறைப்புக்கு ஏற்ப ஒன்றுடன் ஒன்று வேறுபடும்.

9. அது எப்போதும் ஏதோ ஒன்றைச் சார்ந்து அவ்வண்ணமாய் விளங்கும்.

10. அது சத்தாகவும் அசத்தாகவும் மாறும் இயல்புடைத்து ;
ஆணவச் சேர்க்கை அசத்து }
சிவச்சேர்க்கை சத்து } சதசத்து

11. கேவலநிலை :- அம்மை அல்லது பிறவிக்கு முன்னுள்ள நிலை. அது உயிரின் இயல்பான ஊழிக்கால நிலை — இருள் நிலை. இன்ப - துன்பம் எதனையும் அறிய, நுகர. வெளியிட இயலாது,

12. சகல நிலை ;- இம்மை நிலை,
ஏற்கனவே உடனிருந்த ஆணவ மலத்துடன். மாயை எனும் இரண்டாவது மலம் இணைதல். சிறுவெளிச்சம் — செயற்படவும் தன்னைப் பக்குவப்படுத்தவும் அரிய வாய்ப்பு.
இந்நிலையில் மூன்றாவது மலமான கன்மம் கூடும்.

13. கருவாய்க்கிடந்துன் கழலே நினையும் கருத்துடையேன் (அப்பர்) கருவிலிருந்து உயிருக்கு அழகிய உடலும் உலகமும் ( தத்துவங்களும் ) இறைவனின் அருள்கொடையாகக் கிடைக்கின்றன. உடம்பினுக்குள்ளே ( மனித ) உறுபொருள் கண்டு களிப்பதற்கான முயற்சிகள் ஆரம்பம்.

14. சுத்தம் :- மறுமை நிலை. சத்சித் ஆனந்தமான சிவத்துடன் அத்துவிதமாதல்; ஒளிமயம் - பேரின்பம் - சீவன் முத்தர் - பிறவித் துன்பத்துக்கு முடுவிழா.

15. ஆன்மா அதன் நீண்டகால வரலாற்றில் அதியுயர்ந்த நிலை பெற்று ஆறுதலடையும்.

## 4. பாசம் / மலம்

1. பாசம் ;- உடல், உலகம், கரணம், போகங்கள் ஆகிய உயிரைப் பாதிக்கும் சடப்பொருள்கள் பற்றிய தத்துவ விளக்கம்-

2. அது உள்ளது போகாது; இல்லது வாராது என்னும் சற்காரிய வாத அடிப்படையில் அமைவது.

3. உலகும், உயிரும் பிறவும் திடீர்த்தோற்றம் அன்று. அவை யாரோ ஒருவரால் அல்லது கடவுளால் சில நாட்களில் படைக்கப்பெற வில்லை. அவை மிகமிக நீண்டகால வரலாற்றைக் கொண்டவை.

4. பதியுடன் ஒப்பிடுகையில் பாசம், இருள், அறியாமை, துன்பியல் எனக் கருதப்படலாம். ஆயினும் ஆன்மாவை பெத்த நிலையி னின்றும் முத்தி நிலைக்கு இட்டுச் செல்வதால் அவை வேண்டற் பாலன மட்டுமன்றிப் புனிதமானவையுமாம்.

5. ஆணவம் :- சகசமலம் – மூலமலம் அது இயல்பானது; அநாதியே ஆன்மாவுடன் கூடியது! இடையிலே சேர்ந்ததன்று. ஆயினும் அஃது ஆன்மாவின் குணமன்று.

6. ஆணவம் ;- ஆசு, இருள் மறைப்புச் சத்தி, அறிவை மயக்குவது தன்னைக் காட்டாது பிறபொருளையும் காட்டாது.

7. ஆணவம் :- இறுமாப்பு, செருக்கு துணிவு - guts - செயலுக்கு நிமித்த காரணம்,

பெத்த நிலையில் நன்மை தீமை ஆகிய இருவகை நடத்தைக்கும் ஏதுவானது. முத்தி நிலையில் அடியார்க்கு அடங்கிப் பத்தி வைராக்கியமாக வெளிப்படும்.

8. ஆன்மா தன் செயலுக்கு நிமித்த காரணமாயுள்ள ஆணவத்தை அறியாது.

10. ஆணவம் உயிர்களைப் பீடித்திருக்கும் ஒரு நோய் - பிறவித் துன்பத்துக்குக் காரணமாவது. உயிர்களைப் பீடித்திருக்

கும் இக்கொடிய நோயைக் குணப்படுத்தி, இறைபொளியை உணர வைப்பதற்கென்றே இறைவன் தன்னுள் அடங்கியுள்ள சடசத்தியைக் கொண்டு உயிர்களுக்கான உடல் உலகம் முதலிய வற்றைத் தோற்றுவித்தான்.

11. எனவே உயிருக்கு மாயை சிவனருளால் உபகரிக்கப்பெற்றது.

12. மாயை உலகத் தோற்றத்திற்கான மூலக்கூறு - முதற்காரணம்.

13; அது உள்பொருள்; அநாதி.

14. மாயை சுத்தம், அசுத்தம், பிரகிருதி என முக்கூறாகித் தத்துவங்களாகும்.

15: தத்துவங்கள் 36 + 60 = 96.

16. ஆன்மாவின் செயற்பாட்டுக்கு ஒரு உதாரணம் நெல்.
முதற்காரணம் = கன்மம் = இறை
நிமித்த காரணம் = ஆணவம் = உமி
துணைக்காரணம் = மாயை = தவிடு

17. மாயை இறைவனை உணர்ந்து, அவனை அடைவதற்கான வழி.

18. மாயை மயக்குவது பொய்த்தோற்றம்; இல்பொருள்; கயிற்றரவு. இவை சைவநெறிக் கொள்கை அன்று.

19. கன்மம் ஆன்மாவின் முயற்சியால் பெற்ற தேட்டம்.

20. அது இருவகை: நல்வினை, தீவினை.

21. கன்மம் அநாதி - சடப்பொருள்
தானாக ஆன்மாவைச் சேராது-
சேர்ப்பவன் சிவன் (சிவசக்தி)

22. கன்மம் மூவகை;
பழவினை = சஞ்சிதம்
நிகழ்வினை = பிராரப்தம்
எதிர்வினை } ஆகாமியம்
எஞ்சிய வினை }

23. ஆன்மாக்களின் 1. தொடரும் பிறவி
2. அவற்றின் வகை
3. சுகதுக்கம்
இவற்றுக்குக் காரணம் கன்மம்.

24. உலகம் ஒடுங்கும். விரியும். மாறும். ஆயினும் அதற்குத் தோற்றம் முடிவு. அழிவு இருக்காது.

## 5. பிறவி

1. பிறவிப் பெருங்கடல், பிறவித் துன்பம் பிறவாமை வேண்டும்.

2. சிவபெருமான், சீவன் முத்தர் ஆகிய இரு சாரார் தவிர்ந்த, எல்லா உயிர்க்கும் பிறவி உண்டு.

3. உயிர்கள் மலங்களினின்றும் நீங்கி, இறையுணர்வு பெற்று உய்யுமாறு சிவனால் வழங்கப்பெற்ற அருள்கொடையே பிறவியாகும் அது உயிரின் தொடக்கம் இறுதி அன்று.

4. பிறவி ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர்வரை பலவாகலாம்.

5. ஒவ்வொரு பிறவிக்கும் அடிப்படைக் காரணம் - வினைக்கொள்கை (உண்டு) அஃது எழுந்தமானமாக நடைபெறுவதில்லை.

6. பிறவிக்கு காரணம் :
நிமித்த காரணம் — சிவன்
துணைக் காரணம் — சிவசக்தி
முதல் காரணம் — மாயை

7. பிறவி அநாதி.

8. ஆன்மாக்களுக்குப் பழவினை உண்டு. ஆயினும் அது தான் விரும்பியபடி பிறவி எடுக்க முடியாது.

9. கனமம் சடப்பொருள். அதுவும் தானாகத் தொழிற்படாது. ஆன்மாவைக் கூடிப் பிறவியைத் தருவது அதன் வேலையன்று.

10. உலகத்துக்கும், உலகத்திலே உள்ளவற்றுக்கும் ஒரு வரலாறு உண்டு. அதே போன்று ஆன்மாவுக்கும் பல பிறவிகளையும், கன்மத்

தொகுதிகளையும் கொண்ட நீண்ட வரலாறு உண்டு. இவ்வர லாறு ஆன்மாவாகிய ஒலி, ஒளி நாடாவில் பதிந்திருக்கும்.

11. ஆயினும் மறைத்தல் தொழில் மூலம் சிவன், இவ்வரலாற்றை ஆன்மாக்கள் அறியாவண்ணம் மறைத்து வைத்துள்ளார்,

12. ஒரு பிறவிக்கும், மறுபிறவிக்கும் இடைப்பட்ட காலம் உறக்க நிலை. அஃது ஆன்மாக்களின் பக்குவ நிலையைப் பொறுத்துக் கூடலாம் குறையலாம்.

13. ஆன்மாவின் சாந்திக்காக இயற்றப்படும் அபரக்கிரியையின்போது புரோகிதருக்கு வழங்கப்படும் வேட்டி சால்வை முதலியன ஆவி யைச் சென்றடைவதில்லை.

14. ஆயினும் அவற்றுக்காக நாம் செய்யும் வழிபாடு, அவ்வான்மாக் களின் மறுபிறப்பை வளம்படுத்த உதவலாம்.

15. ஆவி பேசுகிறது என்பது அப்பட்டமான ஏமாற்று வித்தை.

16. பிறவிகளின் மூலம், எம்பெருமான், ஆன்மாக்கள் கூர்ப்படைந்து முன்னேறுவதற்கான வாய்ப்புக்கள் பலவற்றை அளித்து வருகி றான்

17. இப் பிறவியில் விதைத்தவற்றை மறுபிறவியில் அறுவடை செய்ய லாம். ஒருமைக்கண் கற்ற கல்வி, இயற்றிய புண்ணிய பாவங்கள் அடுத்துவரும் பிறவிகளில் அதற்கான பலனைத் தரும்.

18. தெய்வத்தான் ஆகாது; எனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலிதரும். இக்கோட்பாடு மனிதனின் முயற்சிக்கும், முன்னேற் றத்துக்கும் தூண்டுகோலாய் அமையும்.

## 6. வினையும் பயனும்

1. செய்தக்க பணியைச் செய்தல்; அல்லவற்றைச் செய்யாமை புண் ணியமாம். செய்தக்க செய்யாமை: செய்தக்க அல்ல செய்தல் பாவமாம். இவற்றுக்கான வெகுமதி / தண்டனையை நாம் அனை வரும் அனுபவித்தே ஆகவேண்டும். இதனை ஊழ். விதி, Law of Karma என்க.

2. நாள், கோள், பேய், பிசாசு, செய்வினை, சூனியம் என்பதெல்லாம் ஒருவனின் புண்ணிய பாவங்களுக்குப் பாமரமக்கள் வழங்கி வரும் சொற்களாகும்.

3. வினைகள் யாவும் உள்ளத்தால் இயற்றப் பெற்றாதல் வேண்டும். மனத்தானாம் மாணா செய்யாமை ( தி.கு ) அங்ஙனமல்லாதவை தொழிற்றுறை முதலியன நன்மையையோ, தீமையையோ நல்கா. சொல்லப்பெற்ற தொழிலின்கண் இழைக்கப்பெறும் புண்ணியமும் பாவங்கழுமே ஆன்மாவின் பிறவிக்குக் காரணமாகும்.

4. தனியனின் வினைப்பயனை அவரே நுகர்வர். அதனை வேறொருவர் நுகர்தல் இயலாது.

5. பெற்றாரின் வினை பிள்ளைக்குவர நியாயமில்லை; அவை வெவ்வேறு ஆன்மாக்கள். ஆராரோ ஆரிவரோ.

6. சென்ம பாவம் என்னும் கொள்கை சைவத்தில் இடம்பெற வில்லை.

7. எனினும் ஒருவரின் பிள்ளைகள் அன்னாரின் நிலைக்கேற்ற பழவினையோடு கூடியவராய் விளங்குதல் இயற்கை. ஏழைக்கு ஏழையும், செல்வந்தனுக்குச் செல்வனும் பிறக்கலாம்.

8. எனவே பெற்றார் இயற்றிய பாவத்துக்குப் பிள்ளை பலியாகிறது என்பது தவறு.

9. தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் - மக்களாலும் பிறவற்றாலும் அறியப்படும்.

10. அகத்தே பிறழ்வான ஒழுகத்தை உடையவர், புறத்தே தவ வேடத்தில் வாழ்வதும் உண்டு. அன்னாரின் பொய்யொழுக்கத்தை எச்சங்கள் காட்டிவிடும்.

11. தாமே பெற்று வளர்த்த பிள்ளையை பேயே, நாயே என்று திட்டுவது பேதமை.

12. தனியனின் வினை தனியனை அடைதல்போல, குடும்பமாகவும் சமூகமாகவும் இயற்றிய வினைகள் முறையே குடுபத்தவரையும், சமூகத்தவரையும் பாதிக்கும்.

3. சில நாடுகள், தொடர்ச்சியான வெள்ளப் பெருக்கு, பூகம்பம், எரிமலை, போர் முதலியவற்றால் அழிவது வேறு சில நாடுகள் எவ்வித சிக்கலும் இன்றி செல்வத்துள் திளைப்பதும் இவ்வுலக இயற்கை, இதற்கு அவ்வந் நாட்டவரின் நல்வினை தீவினைகளே ஏதுவாகும்.

14. தீவினைகளிற் கொடியது, பிறர் ஒருவர் / பிற உயிர்கள் வேதனையுறும் படியாக நடப்பதேயாகும்.

15. நேரடியாக ஒரு பெரியவர் மனம் குளிர / வெளிர நடைபெற்ற கருமங்கள் மிகக் குறுகிய காலத்தில் அதற்கான பயனைக் கொடுக்கும்.

16. நற்கருமம் ஆயினும் அரன் தன் பாதம் மறந்து செய்வதாயின் அது பயனற்றதாய் முடியும்.

17. ஒருவன் ஒரு வினையை ஈட்டும் அக்கணமே, அவ் வினையை நுகர்வதற்கான காலம், இடம் பிறப்பு யாவும் நிச்சயிக்கப் பெற்று விடும். ஒருகணம் இயற்றும் பாவத்தை, மறுகணம் இயற்றும் புண்ணியத்தால் மறைக்கவோ குறைக்கவோ முடியாது.

18. சீவன்முத்தர் மத்தியில் ஊழானது தன்வலியிழந்து, எரிமுன் வைத்தூறு போலக் கெடும்.

## 7. கடவுள் - சிவபெருமான்

1. கடவுள் யாவற்றையும் கடந்தவர்; யாவற்றுக்கும் உறைவிடமானவர்; அவற்றுள் நீக்கமற நிறைந்து நிற்பவர்; இயல்பானவர்; என்றும் மாறா இயல்பினர். யாவற்றினதும் மாற்றத்துக்குத் தானே காரணமானர். அவனின்றி அணுவும் அசையாது.

2. கடவுள் உண்டு என்பது சைவ சித்தாந்தம், முடிந்த முடிபு. அங்கே முரண்பட்ட பல்வேறு கருத்துக்களுக்கு இடமில்லை. இப்படியும் இருக்கலாம், அப்படியும் இருக்கலாம் என்னும் வேதாந்திகளின் ஐயப்பாட்டை சைவம் நிராகரிக்கும்.

3. கடவுள் ஒருவன் என்னும் கொள்கையிலும் சைவம் மிக உறுதியாக உள்ளது, சிவன் சத்தி என்பதும் ஒருவரையே குறிப்பதாகும்,

4. சிவன் – சத்தி திருமணத் தம்பதிகளைக் குறிப்பதாகாது, கலங்கள் இரட்டிப்பதன் மூலம் வளர்ச்சிக்கு உதவும் அணுக்கள் Electrone Protone என இரு கூறுகளை உடையவை மின்னியலில் Positive - Negative. உயிரியலில் ஆண் பெண் தத்துவம் காரியத்

தில் உள்ளது காரணத்திலும் உண்டு. எனவே சிவன் - சத்தி தத்துவம் அறிவியல் சார்ந்தது.

5. இது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே இருக்கக்கூடிய தகப்பன் / தாய்; மகன் / மகள்; தமையன் / தங்கை; கணவன் / மனைவி – நால்வகை உறவினரையும் உள்ளடக்கிய ஓர் அற்புத மான தத்துவம்.

6. சைவ சித்தாந்தம் - ஒருமைவாதம் – Monotheism. அது ஏகான்ம வாதம் - Monism – அன்று.

7. சிவன் மூலமூர்த்திகளில் முதலானவன், மேலானவன், வேறானவன்

8. சிவன் எண் குணத்தன் என்பது தமிழ் மரபு. எளியவன்; எட்டுக் குணங்களை உடையவன் எனலுமாம். முற்றுமுணர்தல், முடி விலாற்றல், வரம்பிலின்பம் என்பன முக்குணங்கள்.

9. சிவன் அடியவர்க்கு இன்ப வடிவினன்; எழியவன்; கொடியவர்க்கு கோர வடிவினன் அரியவன்.

10. அடியார் பொருட்டு சிவனார் எடுக்கும் உடல் பூத உடல் அன்று; ஞான உடல். அதனால் அதற்கு தோற்றம் முடிவு அழிவு சிதைவு இல்லை.

11. அறிவிக்காமலே அறிபவர். உடலின்றி உணர்பவர். வீச்சதின்றி விளைவு செய்குவர்.

12. ஆடவல்லான், தானும் ஆடிப் பிறவற்றையும் ஆட்டுவிப்பான். அவர் செயல் அனைத்துமே திருவிளையாடல். செய்யும் தொழி லால் அவர் எவ்வாற்றானும் பாதிப்படைவதில்லை.

13. அன்பின் வடிவான சிவன் உயிரிடத்து உள்ள அன்பின் வடி வாகக் காட்சி தருவான். அன்பினால் தன்னை வழிபடும் அடி யார்க்கு அன்பையும் இன்பையும் அள்ளித்தருவான்.

14. அடியார்க்குத் தோன்றியும், தோன்றாமலும் நின்று அருள்பாலிப் பன் - எளிவந்த செய்வன்.

15, அடியாரின் உள்ளத்திரையில் ( TV ) இல் அவரைக் காணலாம்; கேட்கலாம்; பேசிக்கொள்ளலாம். இஃது அடியார் பெற்ற அனு பவம்.

16. சொரூப நிலை ; குணங்குறி அற்றவர்
மனத்தாலும் நினைப்பரியர்.

தடத்த நிலை : அருவம், உருவம், அருவுருவம்

17. உயிருக்கு என்புதோல் போர்த்த சதை உடலாவதே போன்று, இறைவனுக்கு அண்ட சாரசரங்கள் அனைத்தும் உடலாகும். உடலின் உயிர்ப்புக்கு உயிர் காரணம்; உலக இயக்கத்துக்கு இறைவன் காரணம்.

18. இறை அச்ச வடிவினன்; அற்ப ஆசார சடங்குகளுக்கு ஆசைப் படுபவர்; மயங்குவர், எரிச்சல் உள்ளவர் - என்பது சைவநெறிக் கொள்கை அன்று.
வெய்யாய், தணியாய் ( திமு ).

19; ஒரே சமயம் எங்கும், என்றும் எதிலும் நீக்கமற நிறைந்திருப்ப தால், அவர் போக்கும் வரவும் இல்லாதவர்.

20. ஆன்மாக்களின் பொருட்டு சிவனார் ஆற்றும் தொழில் ஐந்து.

1. படைத்தல் : ஆன்மாக்களின் பக்குவநிலைக்கு ஏற்பப் பொருத் தமான உடல் உலகம் முதலியவற்றைக் கொடுத்தல்:- இது தோற்றுவித்தல் - Creation - என்னும் பொருளுடைத்தன்று.
2. வினையை நுகர்வதற்கான வாய்ப்புக்களை வழங்குதல் காத்தல்.
3. அழித்தல் ; உயிர்களின் வினையை விட்டல். இஃது உயிரை இல்லாமற் செய்வதன்று.
4. மறைத்தல் - மறதி - உயிர்கள் தமது இறந்தகால - முற் பிறவி - நிகழ்வுகளை மறக்கச் செய்தல் எதிர்கால நிகழ்வு களை ஆன்மா அறியவிடாது மறைத்தல்.
5; அருளல் ; முத்திப்பேறு அளித்தல். இறைவன் தானே குரு வடிவாய் வந்து ஆட்கொள்ளுதல்.

21. சிவன். ஆன்மாக்களிடம் கொண்ட அன்பினால். அவற்றின் ஈடேற்றம் கருதி ஐந்தொழில் புரிவர். அவர் விளையாட்டுக்காக - பகிடிக்காக - தற்செயலாக - தனக்காக உலகத்தையும் உலகி லுள்ள பொருள்களையும் படைத்தார் என்பது சைவநெறிக் கொள்கை அன்று.

22. சிவன் - முழுமுதற்பொருள் - உயிர்களுக்கு முத்தி அளிப்பது.

23. சிவன் அத்துவிதப்பொருள்
ஒன்றாய் - உயிரும் உடலும் போல
வேறாய் - கண்ணும் ஒளியும் போல
உடனாய் - கண்ணும் உயிரும் போல.

24. சைவம் கடவுள் உண்மையைக் காட்சி அளவையால் நிருபிக்கிறது.

25. கடவுளைச் சமுதாய அங்கமாகக் கொண்டு – தாய், தந்தை, காதலன் என்றின்னவாறு அண்மையில் நிறுத்தி அன்பினால் வழிபடுதல் சைவமரபு. சிவனைத் தலைவனாகக் கொண்டு அகவொழுக்கத்தில் நிற்றல் தனிச் சிறப்பு.

26. திரு சிவனைக் குறிப்பது. அது சிவத்தோடும், சைவத்தோடும் தொடர்புடைய மக்கள் – சாதனங்களின் முதற்சேர்க்கையாய் ( prefix ) வருவது. யாவும் சிவமயமாதலைக் குறிக்கும்.

27. சிவ வழிபாட்டின் சிறப்பம்சங்கள் ;-
பத்தி வைராக்கியம், முறையிடுதல் நினைத்த காரியத்தை நிறைவேற்றித் தருமாறு அழுது, தொழுது, இரந்து வேண்டுதல். ஆற்றாதவிடத்து உடலை உயிரை வருத்தி மிரட்டுதல், வாதாடுதல், challenge பண்ணுதல்.

28. அடியார்களின் மேற்படி வேண்டுதல்களைச் செவிமடுத்து எம்பெருமான் நிகழ்த்திய அற்புதங்கள் - திருவிளையாடல்கள் - திருமுறைகளிலும், பெரிய புராணத்திலும் காணப்படுவன.

## 8. முத்தி

1. வரைவிலக்கணம் : பேரின்பநிலை. ஆராத இன்பம், பிறவாமை, நிறைமொழி, மாந்தர், மெய்யுணர்தல், சீவன் முத்தர்.
2. பாசங்கள் - பந்தங்களினின்றும் விடுபடுதல்.
3. வீடு - உயிரின் இறுதி இலக்கு - விடுதலை.
4. பிறவிகடோறும் ஈட்டிய அறம், பொருள் இன்பம் - இறுதியாயது முத்தி.
5. எல்லா உயிர்களும் என்றோ ஒரு நாள் முத்தியடையும். சிவன் எவரையும் முற்றாக அழிப்பதோ, நரகத்துக்குள் நுழைப்பதோ இல்லை.
6. இவ்வுலகத்துக்கு வேறாகச் சுவர்க்கம்; நரகம் என இரு பௌதிக உலகம் உளதாக சைவம் இயம்பவில்லை. அவையிரண்டும் இவ்வுலகம் சார்ந்தவை.
7. சீவன் முத்தர்களே நடமாடும் கோயில்கள் இறைவன் அவர் மூலமாக உலகை வழிநடத்தி வருகிறார்.

8. உலக வாழ்வும்; இல்லறமும் முக்திக்குத் தடையானவை அல்ல. வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த வண்ணமே ஒருவன் பேரின்பத்தைப் பருகலாம் - பேரறிஞ்ஞனாய் விளங்கலாம்.

9. முத்தி அடைவதற்கான வழிமுறையை – நடத்தையை - சைவம் வகுத்துள்ளது.

10. பாசஞானம் - விஞ்ஞானம் – உலகியலறிவு – பொருண்மைவாதம் - Materialism.

11. பசுஞானம் - அஞ்ஞானம் – ஆணவ இருள் – அகப்பிரம்மம் – அது கடவுளை மதியாது

12. பதிஞானம் – மெய்ஞ்ஞானம். தான், யான் உணர்வுகெட்டு இறைவனோடு கலத்தல்.

13. ஆன்மா பக்குவநிலை அடையுங்கால், சிவன் தானே குருவடிவாய் வந்து சித்தமலம் அறுவிததுச் சிவமாக்குவான்.

14. தாடலை = தாள் + தலை ஆவதே போன்று முத்திநிலையிலும் ஆன்மாவின் தனித்துவம் அழிவதில்லை.

15. முத்திக்கு வித்தாவது அறம். அது இல்லறம் – துறவறம் என இருவகை. எனைத்தாலும் வாழ்க்கை சிறப்புடைத்து என்பது சைவம்

16. துறவுநெறி தனியனின் அனுபவ ஞானத்தால் வருவது அதற்கு ஞானிகளின் தொடர்பு இன்றியமையாதது. அது முற்பிறவிதோறும் பெற்ற அனுபவமும் ஆகும்.

17. பதிஞானம் பெற்றவரிடம் பின்வரும் ஒழுக்கங்கள் உளவாகலாம்.

18. அடியார்க்கு அடியானாதல் திருவைந்தெழுத்து ஓதுதல், சிவசின்னம் அணிதல்; நோற்றல் - சித்தாகாச வழிபாடு.


19. இத்தகைய ஞானியர்க்குப் பின்வரும் ஆன்மிக முன்னேற்றம் கைகூடும் - இருவினை ஒப்பு, மலபரிபாகம் சத்திநிபாதம்.

20. இந்நிலையே முத்திநிலை; சைவம் சீவன் முத்தருக்கு அதிக சிறப்புச் செய்யும் அவருக்கு உடல் ஆலயம்; சீவன் சிவலிங்கம்; புலன் மணிவிளக்கு; எல்லாப் பகையும் நகையாகும்.

21. வெறும் நூலறிவால், பயிற்சிகளால் ஆசாரம், சடங்கு, உபநயனம், அனுட்டானங்களால், பட்டமளிப்பால் ஒருவர் துறவி, குருக்கள், சீவன் முத்தர், முத்திப்பேறு ஆகிய பக்குவ நிலையை அடைய முடியாது.

அங்ஙனம் கொள்பவர் ஆசாட பூதிகள்.

நமசிவய.



ஸ்ரீலக்ஷ்மி பதிப்பகம், கல்வியங்காடு.